1993 பிப்ரவரி 12]

63—

போளூர் கருவூலக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்.

*11745—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூரில் உள்ள கருவூலக் கட்டிடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போளூரில் உள்ள துணைக் கருவூலம், வட்டாட்சியர் அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. அக்கருவூலத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக செய்யாத காரியங்களையெல்லாம் சிறப்பாகச் செய்து கொண்டு இருக்கிறார்கள். 120 ஆண்டுகளுக்கு முன்பிருந்து அந்தத் துணைக் கருவூலம் தாலுக்கா அலுவலகத்தில் தனி அறையாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தத் துணைக் கருவூலத்தில் 10 அதிகாரிகளும் 71,000 அலுவலர்களும் வந்து பென்ஷன் தொகை பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. மேலும் போளூர், பெரணமல்லூர், கலசபாக்கம் ஆகிய 3 தொகுதிகளிலிருந்து அரசு அலுவலர்கள் அங்கே வந்து பென்ஷன் பெறுகிறார்கள். எனவே அந்தக்கருவூல அலுவலகத்தின் பகுதியை தனிக் கட்டிடமாகப் புதுப்பிக்க இந்த நிதியாண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் 202 துணைக் கருவூலங்கள் இருந்து வருகின்றன. அவற்றில் 58 துணைக் கருவூலங்கள் அரசாங்கத்தால் கட்டப்பட்ட கட்டிடங்களிலும், 80 துணைக் கருவூலங்கள் வட்டாட்சியர் அலுவலகங்களின் பகுதியிலும், 58 துணை கருவூலங்கள் வாடகைக் கட்டிடங்களிலும் இயங் வருகின்றன. இதைத் தவிர 6 கருவூலங்கள் அரசு சார்ந்த பல கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. போளூரைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று பழமையான கட்டிடத்திலேதான் போளூர் துணைக்கருவூலம் இயங்கி வருகிறது. அது கருதி, அந்தக் கட்டிடத்தில் சில பல பழுதுகள் செய்யவேண்டியதன் காரணமாக, போதுமான

வசதிகள். தேவைகளைச் செய்ய, அதாவது கண்ணாடி பதித்தல், கூடுதலான மின் விசிறிகள், மின் விளக்குகள் அமைத்தல், ஓய்வூதியம் பெறுபவர்கள் அமருவதற்கான தனிக் கூடம் அமைத்தல், தண்ணீர் வசதியுடன் கழிப்பறை கட்டுதல் கேஸ் கவுண்டர் பழுது பார்த்தல், புதிய ஓடுகள் போட்டு, அவற்றில் வெளிச்சம் வருவதற்காக கண்ணாடிகள் பதித்தல், மற்றும் பாதுகாப்பு அறையைச் சுற்றிலும் உள்ள சுவற்றைப் பழுது பார்த்தல் போன்ற பழுது பார்க்கும் பணிகள் ரூ. 1,80,000 மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அதிலே கழிப்பறை கட்டுவதைத் தவிர மற்றைய பணிகள் 1992-93 இறுதிக்குள் செய்து முடிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. கழிப்பறை கட்டுவது என்பது 1993-94 ஆம் ஆண்டு இரண்டாவது பகுதித் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும். மற்றவைகள் இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுக்கு இதற்காக என்னுடைய உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதி ஆண்டில் பட்ஜெட்டில் அதை எடுத்துக் கொள்ளத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள்ளேயே செய்து முடிக்கப்பட்டுவிடும். கழிப்பறை கட்டுவது மட்டும் 1993-94ல் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

64—

இராஜபாளையம் வட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டிற்கு நில வரியைத் தள்ளுபடி செய்தல்.

11730 திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் வட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டு முழுமையாக மழையே இல்லாததாலும், விவசாயமும் முழுமையாக நடைபெறாததாலும், இந்த விவசாய ஆண்டில் நிலவரி தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?